DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT KUNNAM**

| | | |
|---|---|---|
| Calendar | : | STC/ 19/ 2021 |
| Miscellaneous | : | Private Case |
| preliminary Register | : | |
| Sessions | : | |
| DEPOSITION OF WITNESS for | Prosecution<br>Defence<br>Court | மனுதாரர் தரப்பு சாட்சி 1 |
| Name | : | சேகர் |
| Father's/Husband Name: | | ராசு |
| Village | : | ஜெமீன்பேரையூர் |
| Taluk | : | குன்னம் |
| Age | : | 50 /2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 16/12/2022.

**<u>மனுதாரர் தரப்பு முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து தற்போது தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஒப்பந்தாரராக பணி புரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் ராணுவத்தில் 16 ஆண்டுகள் பணி புரிந்தேன். 24.10.2018 ம் தேதி நான் மின்சார வாரியத்தில் வேலை முடித்து விட்டு காலை 10 மணிக்கு எனது இருசக்கர வாகனத்தில் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தேன். அப்போது எனது ஊரை சேர்ந்த பரஞ்சோதி என்பவர் 10 ஆடுகளை மேய்ச்சலுக்காக ரோட்டில் ஓட்டிவந்து கொண்டிருந்தார். நான் ஆடுகள் செல்வதற்காக எனது இருசக்கர வாகனத்தை ஓரமாக நிறுத்தி இருந்தேன்.

2. அதில் ஒரு ஆடு எனது இருசக்கர வாகனத்தின் பெட்டியின் மீது மோதி கீழே விழுந்து எழுந்து சென்று விட்டது. அதிலிருந்து பரஞ்சோதி என்னையும் எனது மனைவியையும் ஜாடை மாடையாக பேசி திட்டி வந்தார். இதனால் பரஞ்சோதிக்கும் எங்களுக்கும் முன்விரோதம் இருந்தது.

அதன் பிறகு 06.01.2020 ம் தேதி மதியம் 12 மணியளவில் பரஞ்சோதி எனது மனைவியை ஆபாசமாக திட்டி சண்டை போட்டுள்ளார்.

3. நான் அப்போது ஆலத்தூர் யூனியன் ஆபிசில் கவுன்சிலர் பதவி ஏற்பு விழாவில் கலந்து கொண்டிருந்தேன். அப்போது எனது நண்பர் நீலமேகம் என்பவர் அரியலூர் செல்ல வேண்டி என்னை கூப்பிட்டதன்பேரில் அவரை அரியலூர் சென்று விட்டு விட்டு சரியாக 2 .30 மணியளவில் அவரை இறக்கி விட்டு விட்டு 2.45 மணிக்கு நான் வீட்டிற்கு வந்தேன். குளித்து விட்டு 3 மணியளவில் மீண்டும் வேலைக்கு வந்து விட்டேன்.

4. அன்றைய தினம் 3.15 மணியளவில் எனது மனைவி பொங்கலுக்காக ஜாமான்களை வெளியில் வைத்து சுத்தம் செய்து கொண்டிருந்தபோது பரஞ்சோதி என்பவர் அத்து மீறி பாத்திரங்களை தள்ளி விட்டு விட்டு என் மனைவி மயிரை பிடித்து மூஞ்சியில் காரி துப்பி தகாத வார்த்தைகளால் திட்டி அரிவாள் மனையாள் கொலை செய்து விடுவதாக கூறியுள்ளார்.

5. என் மனைவியின் அலறல் சத்தம் கேட்டு அக்கம்பக்கத்தினர் ஓடி வருவதை பார்த்ததும் பரஞ்சோதி சென்று விட்டார். 07.01.2020 ம் தேதி காலை 9 மணிக்கு பணி முடித்து விட்டு வீட்டிற்கு வந்தேன். அப்போது என் மனைவி முதல் நாள் நடந்த விபரங்களை என்னிடம் தெரிவித்தார். அதன் பிறகு என் மனைவியை குன்னம் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க அழைத்து சென்றேன். பரஞ்சோதியின் மீது எனது மனைவி புகார் கொடுத்தார். பின்னர் நாங்கள் வீட்டிற்கு சென்று விட்டோம்.

6. 09.01.2020 அன்று எனக்கு போன் வந்தது. நான் யாரென்று கேட்டதற்கு குன்னம் காவல் நிலையத்தில் இருந்து காவல் ஆய்வாளர் பேசுவதாக தெரிவித்தார். அதன்பேரில் நானும் என் மனைவியும் குன்னம் காவல் நிலையம் சென்றோம். நாங்கள் வந்து பார்த்தபோது ஸ்டேசனில் இன்ஸ்பெக்டர் இல்லை. எனக்கு வந்த போன் நம்பரை வைத்து நான் தொடர்பு கொண்டபோது ஆய்வாளர் பெரம்பலூர் நீதிமன்றத்தில் இருப்பதாகவும் தற்போது சென்று விட்டு கூப்பிடும்போது வரவேண்டும் என்று சொன்னார்.

7. அதன் பிறகு 18.01.2020 அன்று மீண்டும் எனக்கு போன் அழைப்பு வந்தது. யாரென்று கேட்டதற்கு குன்னம் எஸ்.ஐ பேசுவதாக கூறினார்.

என்னவென்று கேட்டதற்கு பரஞ்சோதி என்பவர் விசாரணைக்கு வந்திருப்பதாகவும் எங்களையும் வரச்சொன்னதன்பேரில் நான் எனது மனைவி மற்றும் எனது ஊரை சேர்ந்தவரகள் 4,5 பேருடன் குன்னம் காவல் நிலையம் சென்றோம்.

8. காவல் நிலையம் சென்றபோது ஆய்வாளர் கதிரவன் மற்றும் உதவி ஆய்வாளர் மணிகண்டன் ஆகியோர் என்னை உள்ளே வரச்சொன்னார்கள். என்னவென்று கேட்டபோது பரஞ்சோதி எனது பெயரில் ஸ்ட்ராங்காக கேஸ் கொடுத்திருப்பதாகவும் அதன்பேரில் கேஸ் போட்டால் உனது பென்சன் கட்டாகும், ஜெயிலுக்கு சென்றால் வெளியே வர 3 மாதங்கள் ஆகும், அதனால் ரூ.25000/– பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள்.

9. நான் பரஞ்சோதிதான் அத்து மீறி எனது வீட்டிற்குள் நுழைந்து எனது மனைவியை அடித்தார்கள் அரிவாள் மனையை காட்டி கொலை மிரட்டல் விடுத்தார்கள். அதனால் அவர்கள் தான் பொய் வழக்கு போட்டு என்னை மிரட்டுகிறார்கள் என்றும் அதற்காக நான் பணம் கொடுக்க முடியாது என்றும் கூறினேன். அதற்கு ஆய்வாளர் கதிரவன் அவர்கள் இவனெல்லாம் திருந்த மாட்டான் ஜெயிலுக்கு போனால்தான் புரியும் என்றும் நீ ராணுவத்தில் என்னடா புடுங்குன என்றும் உன் மூஞ்சியை பார்த்தா திருட்டு பய மாதிரி தெரிகிறது என்ற தரக்குறைவான வார்த்தைகளால் திட்டினார்.

10. அதன்பிறகு உதவி ஆய்வாளர் மணிகண்டன் கூப்பிட்டு இவன் சொன்னதை கேட்டா பாரு இல்லை என்றால் பேசிக்கொள்ளலாம் என்று கூறினார். அதன் பிறகு உதவி ஆய்வாளர் 2 தரப்பினரையும் அழைத்து விசாரணை செய்தார். என்னுடன் வந்தவர்களிடம் பரஞ்சோதி மற்றும் அவரது மாமா ஆகியோர் 1 லட்சம் பணம் கேட்டுள்ளார்கள். அதற்கு நான் பணம் தர முடியாது என்று சொன்னதால் கேசை வாபஸ் வாங்க முடியாது பரஞ்சோதி தரப்பினர் கூறினார்கள். அதன் பிறகு 2 தரப்பினரிடமும் எழுதி வாங்கி கொண்டு மறுநாள் காலை 10 மணிக்கு வருமாறு உதவி ஆய்வாளர் மணிகண்டன் சொன்னார்.

DMONUKUNAM

11. அதன்பேரில் நான் எனது மனைவி மற்றும் ஊர்க்காரர்கள் சில பேருடன் மறுநாள் காலை 10 மணிக்கு காவல் நிலையம் சென்றேன். அப்போது உதவி ஆய்வாளர் பரஞ்சோதியின் செல்போன் சுவிட்ச் ஆப் ல் இருப்பதாகவும் அதனால் எங்களை சென்று விட்டு கூப்பிடும்போது வரச்சொல்லி கையெழுத்து வாங்கி கொண்டார். நான் ஸ்டேசனை விட்டு இறங்கி வரும்போது உதவி ஆய்வாளர் என்னை கூப்பிட்டு யோவ் நீ ராணுவத்தில் இருந்திருக்கிறாய் நீ ஜெயிலுக்கு சென்று கலி திங்க ஆசையா உனக்கு பட்டால்தான் தெரியும், ஐயா கேட்ட பணத்தை கொடுத்து விட்டு பிழைக்க வழியை பாரு என்று சொன்னார். நான் எதற்கு பணம் தரவேண்டும் தப்பு செய்யவில்லை, வேண்டுமென்றால் கேஸ் போட்டுக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். மேலும் நீயெல்லாம் ஒரு பிழைக்க தெரியாது புண்டையா இருக்கியேடா என்று சொல்லி போய்ட்டு வா பேசிக்கொள்ளலாம் என்று சொன்னார்.

12. அதன் பிறகு நாங்கள் ஊருக்கு வந்து விட்டோம். நான் 2 கி.மீ சென்று கொண்டிருக்கும்போது எனது செல்லுக்கு ஒரு மெசேஜ் வந்தது. அதில் மனு எண்.11/2020 விசாரிக்கப்பட்டது என போடப்பட்டிருந்தது. பின்னர் நான் வீட்டிற்கு சென்று விட்டேன். அதன் பிறகு 01.02.2020 அன்று நான் பணி முடித்து இரவு 12.30 மணிக்கு வீட்டிற்கு வந்து அதன் பிறகு நான் எனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் வீட்டில் உறங்கி கொண்டிருந்தபோது கதவு தட்டும் சத்தம் கேட்டது. யாரென்று கேட்டதற்கு குன்னம் போலிஸ் வந்திருப்பதாக சொன்னார்கள். அப்போது நான் நேரத்தை பார்த்தபோது அதிகாலை 2.36 மணியாகி இருந்தது.

13. நான் கதவை திறந்து பார்த்தபோது 2 நபர்கள் கருப்பு டிரஸ் அணிந்து மப்லர் கட்டியிருந்தார்கள். என்னங்க சார் என்று கேட்டதற்கு உன்னை கைது செய்ய வந்திருக்கிறோம் என்று கூறினார்கள். இருங்க சார் சட்டையை போட்டு வாரேன் என சொன்னதற்கு ஆய்வாளர் கதிரவன் நீ ஒரு அக்யூஸ்ட் உனக்கு விருந்து வைக்கவா அழைத்து போகிறேன் என்று சொல்லி எனது தலை முடியை பிடித்து இழுத்து எனது இடது கன்னத்தில் அடித்து விட்டார். அந்த சத்தம் கேட்டு எனது மனைவி மற்றும் குழந்தைகள் எழுந்து அழ ஆரம்பித்து விட்டார்கள்.

14. உதவி ஆய்வாளரிடம் எனது குழந்தைகள் அழுகிறார்கள் நான் ராணுவத்தில் இருந்தவன் என்னை கேவலப்படுத்தாதீர்கள் நான் காலையில் காவல் நிலையம் வந்து விடுகிறேன் என்று கூறினேன். அதெல்லாம் முடியாது என்று சொல்லி என்னை வீட்டில் இருந்து ரோட்டிற்கு இழுத்து வந்து எனது வலது தோள்பட்டையில் அடித்து விட்டார். ஒழுங்கா வரவில்லை என்றால் உன்னை காலி செய்து விடுவேன் என்றும் கொலை செய்து விடுவேன் என்றும் மிரட்டினார்.

15. எனது வீட்டில் இருந்து 100 மீ தூரம் அழைத்து சென்றபோது ஒரு சுமோ நின்று கொண்டிருந்தது. அதில் காவல் என்று எழுதி இருந்தது. டோரை திறந்து என்னை உள்ளே ஏற்றினார்கள். நான் உள்ளே பார்த்தபோது நொச்சி குளத்தை சேர்ந்த 2 நபர்கள் அதில் இருந்தார்கள். அதன் பிறகு சுமோ வாகனம் நேராக துங்கபுரம் சென்றது. அங்கு ஒரு நபரை ஏற்றிகொண்டார்கள். அங்கிருந்து குன்னம் காவல் நிலையத்திற்கு காலை 5.30 மணிக்கு வந்தோம். எங்கள் 4 பேரையும் அழைத்து சென்று தரையில் உட்கார வைத்தார்கள்.

16. அதன் பிறகு ஆய்வாளர் கதிரவன் நீ ஜெயிலுக்கு போக போற உனக்கு என்ன திமிறா புண்டாமவனே என்று திட்டினார். அதன் பிறகு அன்றைய தினம் நைட் டியூட்டியில் இருந்த காவலர்களிடம் என்னை ஒப்படைத்தார்கள். என்னிடம் இருந்த செல்போனை வாங்கி கொண்டார்கள். எனது ஆபிசுக்கு தகவல் கொடுக்க கூட போனை என்னிடம் கொடுக்கவில்லை. அன்றைய தினம் முழுவதும் என்னை கீழே உட்கார வைத்திருந்தார்கள் சாப்பாடு கொடுக்கவில்லை. ஒன் பாத்ரூம் போக கூட விடவில்லை.

17. அதன் பிறகு இரவு 9.30 மணிக்கு பெரம்பலூர் நீதித்துறை நடுவரின் வீட்டிற்கு என்னை அழைத்து சென்றார்கள். நீதித்துறை நடுவர் நான் சொன்ன விபரங்களை கேட்டு நான் ராணுவத்தில் பணி புரிந்ததால் என்னை சொந்த ஜாமீனில் விடுவித்தார். நான் தவறு செய்திருந்தால் பரஞ்சோதி புகார் கொடுத்த அன்றே என் மீது வழக்கு பதிவு செய்திருக்கலாம். நான் அவர்கள் கேட்ட லஞ்ச பணத்தை கொடுக்காததால்

DMUNUNAM

என்னை அலை கழித்து மன உளைச்சலுக்கு ஆளாக்கினார்கள். எனவே எதிரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

DMCUMJM KUNNAM

Taken court by in open court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif–cum–Judicial Magistrate,
Kunnam.